

இராணிப்பேட்டை மாவட்டநிர்வாகத்தின் சார்பில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா சமத்துவபுரம் எதிரில் உள்ள மைதானத்தில் நடைபெற்றது இதில் 72ஆயிரத்து 880பயனாளிகளுக்கு296 கோடியே 46 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை துணை முதலமைச்சர் இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். அப்போது இந்த நிகழ்ச்சி அமைய அயராது பாடுபட்ட நெமிலி ஒன்றிய குழு தலைவரும் நெமிலி கிழக்கு ஒன்றிய செயலாளருமான பி.வடிவேலு மற்றும் அவருடன் பணியாற்றிய நிர்வாகிகளுக்கும் அமைச்சர் ஆர்.காந்தி மேடையில் பேசும்போது நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்தார். மேலும் ஒன்றிய குழு தலைவர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் அறிமுகபடுத்தி அவரை பாராட்டி துணை முதலமைச்சர் கரங்களால் பட்டு வேட்டி அணிவித்து பாராட்டு தெரிவித்தார்.

## கும்மிடிப்பூண்டியில் மருத்துவ முகாம் தொடக்கம்!

திருவள்ளூர், நவ. 10–

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி பேரூராட்சியில் கலைமகள் உயர்நிலைபள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் முகாமை துவக்கி வைத்து தூய்மை பணியாளர்கள் நல வாரிய கார்டு 25 நபர்களுக்கு, கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டசத்து பெட்டகம் 10 நபர்கள், காசநோய் ஊட்டசத்து பெட்டகம் 2 நபர்கள், தொழுநோயாளிக்கு மருத்து பெட்டகம் 1 நபருக்கு வழங்கி பல்வேறு மருத்துவ பாரி சோதனைகள் பார்வையிட்டு துறை அதிகாரிகளிடம் பயனாளிகளுக்கு மருத்துவ சேவை வழங்குமாறு தலைமை செயற்குழு உறுப்பினரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ. கோவிந்தராஜன் வேண்டுகோள் விடுத்தார். இதில் மு.மணிபாலன், எஸ்.ரமேஷ், இரா.அறிவழகன், எம்.கேசவன், மு.பாஸ்கர், எஸ். உதயகுமார், எஸ்.எம்.திருநாவுக்கரசு, கே.வி.நாகராஜ், டி. கே.ராஜா. அர்ஜீனன், பி.கே. நாராயணசாமி, பா.பரத்குமார், எம்.மெய்யழகன், ரெட்டம்பேடு செந்தில் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருகிறது!



**வெற்றிகளால் அடக்கத்தையும்**
**தோல்விகளால் ஊக்கத்தையும்**
**பெறக்கூடியவர்களுக்கு வீழ்ச்சி**
**என்பது எப்போதுமே இல்லை!**

**-முத்தமிழறிஞர் கலைஞர்**

# இராணிப்பேட்டையில் தி.மு.க. - கூட்டணிக் கட்சிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆர்.காந்தி சிறப்புரை!

இராணிப்பேட்டை, நவ. 10 -

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நாளை (11ந்தேதி) தி.மு.க. மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது குறித்து திமுக கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை கூட்டம் நடந்தது.

கூட்டத்திற்கு மாவட்ட தி.மு.க. அவைத் தலைவர் ஏ.கே.சுந்தர மூர்த்தி தலைமை தாங்கினார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக இராணிப்பேட்டை மாவட்ட செயலாளரும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சருமான ஆர். காந்தி கலந்து கொண்டு ஆலோசனை வழங்கி பேசினார். அவர் பேசியதாவது:

தமிழ்நாட்டில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு எஸ்.ஐ.ஆர். கொண்டு வந்துள்ள இந்திய தேர்தல் ஆணையம் சிறுபான்மை

யினர் வாக்காளர்கள் பட்டியல் இன மக்கள் வாக்குகள் பாஜகவின் எதிர்ப்பு வாக்குகள் ஆகியவற்றை குறிவைத்து நீக்கும் நோக்கத்தோடு தகுதி உள்ள வாக்காளர்களை நீக்கி தகுதியற்ற வாக்காளர்களை சேர்க்கும் சதி திட்டத்தோடு ஒன்றிய பா.ஜ.க. அரசை தனக்கு பாதுகாவலராக வைத்துக் கொண்டு தேர்தல் ஆணையம் இதனை செய்து முடிந்திருக்கிறது.



**ஜனநாயகத்தை குழித் தோண்டி புதைக்கும் எஸ்.ஐ.ஆர்.**

அதோடு பீகார் மாநிலத்தில் நடைபெற்ற குளறுபடிகள் எதையும் களையாமல் தமிழ்நாடு உள்ளிட்ட 12 மாநிலங்களில் திட்டத்தை செயல்படுத்துவது மக்களின் வாக்குரிமையை பறிப்பதாகவும் ஜனநாயகத்தை அடியோடு குழி தோண்டி புதைப்பதாகவும் உள்ளது. அத்துடன் தேர்தல் ஆணையத்தின் அவசரமே அதிக சந்தேகத்தை எழுப்புகிறது. இந்த சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் மூலம் தமிழ்நாட்டில் உள்ள உண்மையான வாக்காளர்களின் பெயர்களை பட்டியலில் இருந்து நீக்க தேர்தல் ஆணையம் திட்டமிடுகிறது.

**செவி கொடுக்காத பா.ஜ.க.!**

எனவே இந்த எஸ்.ஐ.ஆர். சீராய்வை தேர்தல் ஆணையம் உடனே கைவிடும் படி தேர்தல் ஆணையத்துக்கு வேண்டுகோள் விடுத்தும் அதனை செவி கொடுக்காத ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவையாக மாறிய போக்கில் இந்திய தேர்தல் ஆணையம் உள்ளது .

தொடர்ந்து தமிழ்நாட்டில் தீவிர சிறப்பு வாக்காளர் எஸ்.ஐ.ஆர். கொண்டு வந்துள்ளதை கண்டித்து மத சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் நவம்பர் 11ஆம் தேதி காலை 10 மணிக்கு இராணிப்பேட்டை முத்துக்கடை அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது, இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மதசார்பற்ற கூட்டணி கட்சியின் நிர்வாகிகள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ,மாவட்ட நிர்வாகிகள், நகர ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் பொது மக்கள் திரளாக கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

கூட்டத்தில் மாநில சுற்றுச்சூழல் அணி துணை செயலாளர் ஆர்.விநோத் காந்தி, மாவட்ட துணை செயலாளர் குமுதா ,உட்பட கூட்டணி கட்சி மாவட்ட நிர்வாகிகள் திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# ‘கரூர் விஷன் 2030 வளரும் கரூர்’ - விழிப்புணர்வு மாரத்தான் போட்டி!

## வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

கரூர், நவ. 10-

கரூர் விஷன் 2030 வளரும் கரூர் என்கிற முன்னெடுப்பில் ரூ. 50 ஆயிரம் கோடி உற்பத்தி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கான விழிப்புணர்வு மாரத்தான் மற்றும் வாக்கத்தான் போட்டிகள் நவ. 9ம்தேதி நடைபெற்றது. கரூர் திருவள்ளூர் மைதானத்தில் இருந்து காலை 5.30 மணிக்கு கரூர் எம்.எல்.ஏ செந்தில் பாலாஜி தொடங்கி வைத்தார். சிஐஐ. யங் இந்தியன்ஸ், உள்ளிட்ட அனைத்து வர்த்தக அமைப்புகளும் இணைந்து இதனை நடத்தின.

போட்டிகளை தொடங்கி வைத்து கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி பேசியதாவது:

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதத்தை 11.19% என உயர்த்தி, இந்தியாவிலேயே முதன் மாநிலமாக்கிய தொழில் முனைவோர்களின் தோழனாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் கனவும் லட்சியமுமான, 2030ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம், ஒன்டிரில்லியன் டாலர் என வளர வேண்டும் எனும் உயரிய இலக்கை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறோம்.

‘கரூர் விஷன் 2030’ ஐம்பதாயிரம் கோடி ரூபாய் உற்பத்தி இலக்கு என்கிற முன்னெடுப்பில், அனைத்து வர்த்தக நிறுவனங்களும் இணைந்து இப்போட்டிகளை நடத்தியுள்ளன. நம்ம கரூர் வளரும் கரூர் நோக்கி வெற்றி நடைபோடுவதற்காக தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும், எப்போதும் துணை நிற்கின்றனர்.

தமிழ்நாட்டில் கரூர் மாவட்டத்தை முதன்மை மாவட்டமாக உயர்த்திடுவோம். பத்தாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இப்போட்டிகளில் கடந்த ஆண்டைவிட சிறப்பாக பங்கேற்றுள்ளனர்.

இன்னும் வரும் ஆண்டுகளில் இதைவிட சிறப்பாக நடைபெறும். நம் முன்னோர் உருவாக்கிய கரூரை இளம் தலைமுறையினர் கையில் எடுத்து வரும் தலைமுறையினருக்கு உணர்த்திடும் வகையில்,

பங்கேற்க செய்யும் வகையில், சிறப்பான முன்னெடுப்பை மேற்கொண்டுள்ளனர். நம்முடைய மண்ணின் வளர்ச்சிக்காக கரூர் மாவட்டத் தின் வளர்ச்சிக்காக எந்நாளும் துணை நிற்பேன்.

இவ்வாறு செந்தில் பாலாஜி பேசினார்.

கரூர் மாவட்ட கலெக்டர் மீ. தங்கவேல், எஸ்.பி. ஜோஷ் தங்கையா, மாநகராட்சி ஆணையர் சுதா மற்றும் வர்த்தக அமைப்புகளின் நிர்வாகிகள் அதிகாரிகள் மாணவ மாணவியர் கலந்து கொண்டனர்.

### நீலகிரி மாவட்ட தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் சார்பில்

# தீவிர வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தத்தை கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்போம்!

## மாவட்ட தி.மு.க. – தோழமைக் கட்சி நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

உதகை,நவ.10-

நீலகிரி மாவட்டத்தில் திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிள் கூட்டம் மாவட்ட கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட திமுக பொறுப்பாளர் கே.எம்.ராஜூ அவர்கள் தலைமையில், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக், கழக தேர்தல் பணி செயலாளர் - அரசு தலைமை கொறடா கா.ராமசந்திரன் மற்றும் காங்கிரஸ் கட்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் நாகராஜ், சி.பி.ஐ மாவட்ட செயலாளர் போஜராஜ், சி.பி.எம் செயற்குழு உறுப்பினர் சங்கரலிங்கம், முஸ்லிம் லீக் மாவட்ட செயலாளர் அனீபா, திராவிடர் கழகம் மாவட்ட தலைவர் ஜீவா, விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர்கள் புவனேஸ்வரன், சுதாகரன், மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட தலைவர் அபுதாகீர், மதிமுக முன்னாள் நகர செயலாளர் அக்பர் அலி, மக்கள் நீதி மய்யம் மாவட்ட செயலாளர் ஜாகீர் ஹாசன், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் தி.மு.க. தோழமைக் கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர்.

இந்திய தேர்தல் ஆணையம் ஒன்றிய பா.ஜ.க., அரசிற்கு அடிபணிந்து SIR எனும் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்தை எதிர்வரும் 2026 சட்டமன்ற தேர்தல் நடைபெறும் தமிழ்நாடு, கேரளா உள்ளிட்ட 12 மாநிலங்களுக்கு அறிவித்துள்ளது, இதற்கு நாட்டிலுள்ள பெருபான்மையான அரசியல் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

ஒன்றிய பா.ஜ.க.,வின் எதிர்ப்பு வாக்குகள், சிறுபான்மை மற்றும் பட்டியலின மக்களின் வாக்குகள் ஆகியவற்றை குறிவைத்து நீக்கி, தகுதியற்ற வாக்காளர்களை சேர்க்கும் சதிதிட்டத்துடன் தேர்தல் ஆணையம் செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில், திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி தலைவர்கள் கூட்டாக ஒன்றிய அரசின் இந்த சிதிதிட்டத்தை எதிர்த்திடும் வகையில் நாளை (11-11-2025 செவ்வாய்கிழமை) தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்ட தலைநகரங்களில் கண்டன ஆர்பாட்டம் நடைபெறும் என அறிவித்துள்ளனர்.

அதன்படி, நீலகிரி மாவட்ட திமுக - தோழமை கட்சிகள் சார்பில் நாளை (11-11-2025 செவ்வாய்கிழமை) காலை 11 மணியளவில் உதகை ஏ.டி.சி., ஜீப் நிறுத்தம் முன்புறம் மாபெரும் கண்டன ஆர்பாட்டம் நடைபெற உள்ளது.

ஜனநாயகத்தை பாதுகாத்திட நடைபெறும் இந்த மாபெரும் கண்டன ஆர்பாட்டத்தில் திமுக, இந்திய தேசிய காங்கிரஸ், திராவிடர் கழகம், சி.பி. எம், சி.பி.ஐ, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மதிமுக, விடுதலை சிறுத்தைகள் கட்சி, மக்கள் நீதி மய்யம், மனிதநேய மக்கள் கட்சி, மனித நேய ஜனநாயக கட்சி உள்ளிட்ட திமுக தோழமை கட்சிகளின் ஒவ்வொரு நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் பெருந்திரளாக கலந்துக்கொண்டு சிறப்பித்திட அனைவரையும் நீலகிரி மாவட்டத்திலுள்ள மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதி, திருநாவலூர் ஒன்றியம், களமருதூர் ஊராட்சி அரசினர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமினை உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர், வடக்கு மாவட்ட கழக அவைத்தலைவர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் துவக்கி வைத்து, அரங்குகளை பார்வையிட்டு, ஆய்வு செய்து, பொதுமக்களின் சிகிச்சை முறைகளை மருத்துவர்களிடம் கேட்டறிந்தார், இந்த முகாமில் மாவட்ட சுகாதார அலுவலர் ராஜா, வட்டார மருத்துவ அலுவலர் செல்வி, இருதய நிபுணர் மருத்துவர் பச்சையப்பன், மாவட்ட தொற்றுநோய் பிரிவு அலுவலர் ராஜேஷ், களமருதூர் பி.எச்.சி ஸ்ரீநாத், சுகாதார ஆய்வாளர் சக்திவேல், ஆனந்தராஜ், மணிகண்டன், ஊராட்சி மன்ற தலைவர் கதிரேசன், ஒன்றிய கவுன்சிலர் அலமேலு ஏழுமலை, நகர கவுன்சிலர் செல்வகுமாரி ரமேஷ் உள்ளிட்ட பலர் உடன் கலந்து கொண்டனர்.

### இராமநாதபுரம் மாவட்டத்தில்

# எஸ். ஐ.ஆர்.ரைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராம லிங்கம் எம்.எல்.ஏ. அறிக்கை!

இராமநாதபுரம், நவ.10-

இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராம லிங்கம் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R) கொண்டு வந்துள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் வருகிற 11.11.2025 செவ்வாய்க் கிழமை அன்று காலை 10.00 மணி அளவில் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் வளாகம் முன்பு “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெற உள்ளது.

எனவே இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி மாநில, மாவட்ட நிர்வாகிகள் உள்ளிட்ட கூட்டணி கட்சி தோழர்கள், கழக மாநில, மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள், முன்னாள் இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், BLA2, BDA, உள்ளிட்ட அனைவரும் தவறாது ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் மூலம் நலம் காக்கும் ஸ்டாலின் பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவ முகாம் பரமக்குடி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பரமக்குடி எஸ் என் வி அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற முகாமை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார் இந்நிகழ்வில் சேது கருணாநிதி, குணா, ஜீவரத்தினம் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.